# சேவா வாணி

செப்டம்பர் 2026 | இதழ் 45



ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனங்கள் (இந்தியா)

தமிழ்நாடு - தெற்கு

# பிரேம தாரா

(பகவான் பாபா தனது மாணவர்களுக்கு எழுதிய கடிதங்களின் தொகுப்பு)

**அன்பு மாணவர்களே!**

நம்மை மகிழ்ச்சியாக வைத்திருக்க வேறு எவரும் நமக்குத் தேவையில்லை. ஏனெனில், நாமே மகிழ்ச்சியின் வடிவமாக இருக்கிறோம்.

நீங்கள் ஆன்மீகப் பாதையில் முன்னேற தொடங்கியுள்ளதற்கான முதல் அறிகுறி, உங்கள் முகத்தில் மகிழ்ச்சியும் உற்சாகமும் தோன்றுவது தான். ஒருவர் எப்போதும் சோகமாகவும் மனச்சோர்வுடனும் இருந்தால், அதற்குக் காரணம் அஜீரணக் கோளாறாகக்கூட இருக்கலாம்; ஆனால், அது ஒருபோதும் ஆன்மீகத்தின் அடையாளமாக இருக்காது.

என் அன்பு மாணவர்களே! இன்று நான் உங்களுடன் இருக்கிறேன்; உங்களுக்கு உள்ளும் இருக்கிறேன். எப்போதும் மகிழ்ச்சியாக இருங்கள்!

அன்பான ஆசிகளுடன்,<br>
பாபா

## இந்த மாதச் சேவை

**11**
மாவட்டங்கள்

**66**
செயல்பாடுகள்

## பயனாளிகள்

**4,763**
இந்த மாதச் செயல்பாடுகளில் பதிவான பயனாளிகளின் மொத்த எண்ணிக்கை

● ஆன்மிகப் பிரிவு ● சேவைப் பிரிவு ● கல்விப் பிரிவு

## பிரிவுகள் வாரியாக

| ஆன்மிகப் பிரிவு | சேவைப் பிரிவு | கல்விப் பிரிவு |
|---|---|---|
| 1,317 | 3,213 | 233 |
| பயனாளிகள் | பயனாளிகள் | பயனாளிகள் |
| 30 செயல்பாடுகள் | 29 செயல்பாடுகள் | 7 செயல்பாடுகள் |

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| காஞ்சிபுரம் தெற்கு | 12 செயல்பாடுகள் | 5 |
| கோயம்புத்தூர் | 9 செயல்பாடுகள் | 18 |
| திருப்பூர் | 9 செயல்பாடுகள் | 27 |
| ஈரோடு | 8 செயல்பாடுகள் | 38 |
| திருச்சி | 7 செயல்பாடுகள் | 47 |
| திருவண்ணாமலை | 6 செயல்பாடுகள் | 58 |
| தஞ்சாவூர் | 5 செயல்பாடுகள் | 67 |
| திண்டுக்கல் | 4 செயல்பாடுகள் | 72 |
| காஞ்சிபுரம் வடக்கு | 3 செயல்பாடுகள் | 76 |
| தூத்துக்குடி | 2 செயல்பாடுகள் | 80 |
| விருதுநகர் | 1 செயல்பாடு | 82 |

# இல்லத்திலும் உள்ளத்திலும் சாயி நாமம்

**காஞ்சிபுரம் தெற்கு**

**100** சேவாதளத்தொண்டர்கள்

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் "இல்லத்திலும் உள்ளத்திலும் சாயி நாமம்" திட்டத்தின் கீழ் இல்லங்கள் மற்றும் பொது இடங்களில் வேத பாராயணமும் பஜனைகளும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

தாம்பரம் சமிதி சார்பில் இதுவரை 163 இல்லங்களில் ஸ்ரீ ருத்ர பாராயணம் நடத்தப்பட்டு, சுமார் 100 அன்பர்கள் இதில் ஆர்வமுடன் பங்கேற்றுள்ளனர்.





# இணையவழி சாயி இலக்கிய பாராயணம்

காஞ்சிபுரம் தெற்கு

15 சேவாதளத்தொண்டர்கள்

தாம்பரம் சமிதி உறுப்பினர்கள் நாள்தோறும் இரவு 8:00 மணியளவில் இணையவழியில் கூடி ஸ்ரீ சத்ய சாயி இலக்கியங்களை பக்தியுடன் பாராயணம் செய்து வருகின்றனர்.

நிகழ்வின் நிறைவில் உலக அமைதிக்காக சாய் காயத்ரி மந்திர ஜபம் செய்யப்படுகிறது. இதில் தினசரி 15 உறுப்பினர்கள் தவறாமல் கலந்துகொண்டு வருகின்றனர்.

# சாயி புரதச்சத்து மாவு வழங்கும் சேவை

காஞ்சிபுரம் தெற்கு

350 பயனாளிகள்

25 சேவாதளத்தொண்டர்கள்

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் சமிதிகள் இணைந்து ஊட்டச்சத்து மேம்பாட்டிற்காக சாய் புரதச்சத்து மாவு விநியோக சேவையை நடத்தின.
செங்கல்பட்டு அரசு மருத்துவமனை, தாம்பரம் சானடோரியம் காசநோய் மருத்துவமனை, தயானந்த சரஸ்வதி இல்லம் மற்றும் செரப்பணஞ்சேரி கிராமத்தில் உள்ள குடும்பங்கள் என மொத்தம் 350 பயனாளிகளுக்கு 25 சேவாதளத்தொண்டர்களால் ஊட்டச்சத்து மாவு வழங்கப்பட்டது.





# சிறப்பு நாராயண சேவை

காஞ்சிபுரம் தெற்கு | 13.09.2026

188 பயனாளிகள் | 20 சேவாதளத்தொண்டர்கள்

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் கூடுவாஞ்சேரி சமிதி மற்றும் காயரம்பேடு பஜனா மண்டலி ஆகியவை இணைந்து 13.09.2026 அன்று நாராயண சேவையை நடத்தின.

20 சேவாதளத்தொண்டர்கள், சாய் அன்பர்கள் மற்றும் பாலவிகாஸ் மாணவர்கள் ஒன்றிணைந்து தூய்மையாக உணவு தயாரித்து, 188 எளிய மக்களுக்கு அன்போடு வழங்கினர்.





# கிருத்திகை அன்னதான சேவை

காஞ்சிபுரம் தெற்கு | 5 சேவாதளத்தொண்டர்கள்

பார்வதி நகர் சமிதி சார்பில் வல்லக்கோட்டை முருகன் திருக்கோயில் கிருத்திகை அன்னதான சேவையில் 5 மகளிர் சேவாதளத்தொண்டர்கள் கலந்துகொண்டனர்.

உணவு தயாரித்தல், பக்தர்களுக்குப் பரிமாறுதல் மற்றும் கூட்டத்தை ஒழுங்குபடுத்துதல் ஆகிய பணிகளில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திச் சிறப்பாகச் சேவையாற்றினர்.



# சிறப்புச் சாதனா முகாம்

காஞ்சிபுரம் தெற்கு

06.09.2026

14 சேவாதளத்தொண்டர்கள்

பார்வதி நகர் சக்தி விநாயகர் திருக்கோயில் வளாகத்தில் 06.09.2026 அன்று விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு சிறப்புச் சாதனா முகாம் நடைபெற்றது.

முகாமின் ஒரு பகுதியாகக் கோவில் பூஜை பொருட்கள் மற்றும் தெய்வச் சிலைகளைத் தூய்மைப்படுத்தும் சேவை நடைபெற்றது. இதில் 14 சேவாதளத்தொண்டர்கள் மற்றும் பாலவிகாஸ் குழந்தைகள் கலந்துகொண்டு சேவையாற்றினர்.





# விநாயகர் சதுர்த்தி விழா

## காஞ்சிபுரம் தெற்கு

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டப் பெருங்களத்தூர், பார்வதி நகர், கூடுவாஞ்சேரி சமிதிகளில் விநாயகர் சதுர்த்தி விழா பக்தி சிரத்தையுடன் கொண்டாடப்பட்டது.

அதிகாலையில் ஓம்காரம், சுப்ரபாதம், நகர சங்கீர்த்தனம் ஆகியவை நடைபெற்றன; மாலையில் பக்தர்களின் கூட்டுப் பஜனை மற்றும் மங்கள ஆரத்தியுடன் நிறைவுற்றது.





# கோகுலாஷ்டமி விழா

## காஞ்சிபுரம் தெற்கு

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட சமிதிகளில் கோகுலாஷ்டமி விழா இனிதே கொண்டாடப்பட்டது. பெருங்களத்தூர், பார்வதி நகர் மற்றும் கூடுவாஞ்சேரி சமிதிகளில் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன.

அதிகாலையில் ஓம்காரம், சுப்ரபாதம், நகர சங்கீர்த்தனம் மற்றும் மாலையில் பக்தி பஜனைகளுடன் சுவாமியின் அருட்பிரசாதம் பக்தர்களுக்கு வழங்கப்பட்டது.





# சிறப்பு கோ பூஜை

காஞ்சிபுரம் தெற்கு

27.09.2026

பகவானின் கருணையினால் கூடுவாஞ்சேரி சமிதி சார்பில் 27.09.2026 அன்று ஆத்தூர் வேத பாடசாலை கோசாலையில் சிறப்பு கோ பூஜை பக்திபூர்வமாக நடைபெற்றது.

பசுக்களுக்குப் பூஜைகள் செய்யப்பட்டு அகத்திக்கீரை மற்றும் தீவனங்கள் அன்புடன் வழங்கப்பட்டு மங்கள ஆரத்தி எடுக்கப்பட்டது.



# சிறப்பு இலவச மருத்துவ முகாம்

காஞ்சிபுரம் தெற்கு

22.09.2026

12 பயனாளிகள்

பெருங்களத்தூர் சமிதி சார்பில் 22.09.2026 அன்று நவஜீவன் முதியோர் இல்லத்தில் சிறப்பு இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது.

முகாமில் முதியோர்களுக்குத் தேவையான பொது மருத்துவப் பரிசோதனைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்டு மொத்தம் 12 முதியோர்கள் பயனடைந்தனர்.





# அமிர்த கலசம் வழங்குதல்

காஞ்சிபுரம் தெற்கு

19.09.2026

17 பயனாளிகள்

7 சேவாதளத்தொண்டர்கள்

காஞ்சிபுரம் கலெக்டரேட் சமிதி சார்பில் 19.09.2026 அன்று இருளர் குடியிருப்பைச் சேர்ந்த 16 குடும்பங்களுக்கு ஒரு மாதத்திற்குத் தேவையான மளிகைப் பொருட்கள் அடங்கிய "அமிர்த கலசம்" வழங்கப்பட்டது; இதில் 7 ஆண் சேவாதளத்தொண்டர்கள் பங்கேற்றனர்.

அதேபோல் ஸ்ரீபெரும்புதூர் சமிதி சார்பில் நந்திமேடு கிராமத்தில் உள்ள ஒரு குடும்பத்திற்கும் அமிர்த கலசப் பெட்டகம் அன்புடன் வழங்கப்பட்டது.

# நடமாடும் மருத்துவ முகாம் மற்றும் கண் மருத்துவ முகாம்

காஞ்சிபுரம் தெற்கு

20,27.09.2026

299 பயனாளிகள்

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் ஆரம்பாக்கம் சாய் தோட்டத்தில் 20.09.2026 அன்று நடைபெற்ற முகாமில் 134 பயனாளிகள் பங்கேற்றனர்; 108 பேருக்கு ஆய்வகப் பரிசோதனைகளும், 4 பேருக்குக் கண்புரை அறுவை சிகிச்சை பரிந்துரைகளும் செய்யப்பட்டன.

தொடர்ந்து 27.09.2026 அன்று மண்ணிவாக்கம் சமிதியில் நடைபெற்ற முகாமில் 165 பேர் கலந்துகொண்டனர்; 9 பேர் கண்புரை அறுவை சிகிச்சைக்குத் தேர்வு செய்யப்பட்டனர். இரு முகாம்களிலும் சேவாதளத்தொண்டர்கள் சிறப்பாகச் சேவையாற்றி, அனைவருக்கும் நாராயண சேவை வழங்கினர்.





# புதிய பாலவிகாஸ் மையம் தொடக்கம்

கோயம்புத்தூர்

04.09.2026

6 பயனாளிகள்

6 சேவாதளத்தொண்டர்கள்

சுவாமியின் பெருங்கருணையினால் கோயம்புத்தூர் கோவைப்புதூர் சமிதி சார்பில் 04.09.2026 அன்று மகாத்மா காந்தி சாலையில் புதிய பாலவிகாஸ் மையம் தொடங்கப்பட்டது.

இப்புதிய மையத்தில் 6 மாணவ மாணவிகள் இணைந்து தங்களது பாலவிகாஸ் வகுப்புகளைத் துவங்கியுள்ளனர்.



# ஸ்ரீ கிருஷ்ண ஜன்மாஷ்டமி சிறப்பு நிகழ்ச்சி

கோயம்புத்தூர்
04.09.2026
17 பயனாளிகள்
17 சேவாதளத்தொண்டர்கள்

சுவாமியின் பெருங்கருணையினால் கோயம்புத்தூர் மாவட்டம் குனியமுத்தூர் சமிதி சார்பில் 04.09.2026 அன்று ஸ்ரீ கிருஷ்ண ஜன்மாஷ்டமி சிறப்பு நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் 17 சாய் பக்தர்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டு பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் நாமங்களை பஜனை மூலம் பாடி இறையருள் பெற்றனர்.





# ஸ்ரீ கிருஷ்ண ஜன்மாஷ்டமி சிறப்புச் சத்சங்கம்

கோயம்புத்தூர்
05.09.2026
52 பயனாளிகள்
52 சேவாதளத்தொண்டர்கள்

குனியமுத்தூர் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதியில் 05.09.2026 அன்று கிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு "ஸ்ரீ சாய் கிருஷ்ணா லீலா" என்ற தலைப்பில் சிறப்பு சத்சங்கம் நடைபெற்றது.
சுவாமி கல்லூரியின் முன்னாள் மாணவர் முனைவர் கே. ஆனந்தகுமார் அவர்கள் தொகுத்து வழங்கினார்.
இதில் 52 பக்தர்கள் கலந்துகொண்டு சுவாமியின் திவ்ய லீலைகள் குறித்த விளக்கவுரைகளைக் கேட்டுப் பயனடைந்தனர்.





# உலக தசைச்சிதைவு விழிப்புணர்வு தின சேவைப்பணி

கோயம்புத்தூர் | 06.09.2026

50 பயனாளிகள் | 39 சேவாதளத்தொண்டர்கள்

கோயம்புத்தூர் நீலாம்பூர் ராயல் கேர் மருத்துவமனையில் 06.09.2026 அன்று தசைச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட 50-க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இச்சேவையில் 25 ஆண்கள், 14 மகளிர் என மொத்தம் 39 சேவாதளத்தொண்டர்கள் கலந்துகொண்டு, குழந்தைகளைச் சக்கர நாற்காலிகளில் பாசத்தோடு அழைத்துச் சென்று தேவையான அனைத்து உதவிகளையும் கனிவுடன் செய்தனர்.





# கோசாலையில் ஏகாதச ஸ்ரீ ருத்ர பாராயணம்

கோயம்புத்தூர்
09.09.2026

37 பயனாளிகள்
37 சேவாதளத்தொண்டர்கள்

சுவாமியின் பெருங்கருணையினால் மாத சிவராத்திரியை முன்னிட்டு 09.09.2026 அன்று வெள்ளியங்கிரி கோசாலையில் ஏகாதச ஸ்ரீ ருத்ர பாராயணம் பக்தி சிரத்தையுடன் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஆண்கள் 10 பேர், மகளிர் 27 பேர் என மொத்தம் 37 பக்தர்கள் கலந்துகொண்டு வேத பாராயணம் செய்து சிறப்பித்தனர்.

# மகா நாராயண சேவை மற்றும் மந்திர் தூய்மைப்பணி

கோயம்புத்தூர்

13.09.2026

270 பயனாளிகள்

31 சேவாதளத்தொண்டர்கள்

கோயம்புத்தூர் ரேஸ் கோர்ஸ் ஸ்ரீ சத்ய சாயி மந்திரில் 13.09.2026 அன்று மகா நாராயண சேவை மற்றும் கோவில் தூய்மைப் பணிகள் சிறப்பாக நடைபெற்றன.

16 ஆண்கள், 15 மகளிர் என மொத்தம் 31 சேவாதளத்தொண்டர்கள் இணைந்து 270 நபர்களுக்கு உணவுப் பொட்டலங்களைத் தயாரித்து விநியோகித்தனர். மேலும் மந்திர் வளாகத்தையும் முழுமையாகத் தூய்மைப்படுத்தினர்.





# விநாயகர் சதுர்த்தி சிறப்பு வழிபாடுகள்

கோயம்புத்தூர் | 14.09.2026

11 பயனாளிகள் | 11 சேவாதளத்தொண்டர்கள்

குனியமுத்தூர் சமிதி வளாகத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சர்வ சித்தி விநாயகருக்கு 14.09.2026 அன்று விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு சிறப்பு அபிஷேகம், பஜனை மற்றும் ஆராதனை சிறப்பாக நடைபெற்றன.

பக்தர்கள் இல்லங்களிலிருந்து தயாரித்துக் கொண்டுவந்த பிரசாதங்கள் சுவாமிக்குச் சமர்ப்பிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டன; இதில் மொத்தம் 11 பக்தர்கள் கலந்துகொண்டனர்.



# விநாயகர் சதுர்த்தி விழா கொண்டாட்டம்

கோயம்புத்தூர் 14.09.2026

கோயம்புத்தூர் ரேஸ் கோர்ஸ் ஸ்ரீ சத்ய சாயி மந்திரில் 14.09.2026 அன்று விநாயகர் சதுர்த்தி விழா பக்தி உணர்வுடன் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. சிறப்பு பூஜைகள் மற்றும் ஆராதனைகள் நடைபெற்றன.





# பேரிடர் மேலாண்மை விழிப்புணர்வு மற்றும் செயல்முறைப் பயிற்சி

கோயம்புத்தூர்

12.09.2026

100 பயனாளிகள்

100 சேவாதளத்தொண்டர்கள்

கோயம்புத்தூர் பி.ஜி. செவிலியர் கல்லூரியில் 12.09.2026 அன்று பேரிடர் மேலாண்மை விழிப்புணர்வு மற்றும் செயல்முறைப் பயிற்சி முகாம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இப்பயிற்சி முகாமில் 100 செவிலியர் மாணவிகள் மற்றும் சேவாதளத்தொண்டர்கள் கலந்துகொண்டு பேரிடர் கால முதலுதவி மற்றும் மீட்புப் பயிற்சிகளைப் பெற்றனர்.





# வேத வித்வத் போஷணம் - வேத பாடசாலை மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகள்

திருப்பூர் | 10.09.2026 | 21 பயனாளிகள் | 17 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் வேத போஷணம், வேத வித்வத் போஷணம் கோட்பாட்டிற்கிணங்க 10.09.2026 அன்று நல்லூர் ஸ்ரீ சத்ய சாயி பஜனா மண்டலி சார்பில் 17 சேவாதளத்தொண்டர்கள் பழைய கோட்டை ஸ்ரீ சக்தி வேத பாடசாலைக்குச் சென்றனர்.

அங்கு வேதம் பயிலும் 21 மாணவர்களுக்கு வேஷ்டி, துண்டு, ஜமுக்காளம் மற்றும் அரிசி, பருப்பு, நெய், எண்ணெய் உள்ளிட்ட மளிகைப் பொருட்கள், சோப்பு, பற்பசை போன்ற அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு, பஜனையுடன் இனிதே நிறைவுற்றது.



# மாதாந்திர நாராயண சேவை

திருப்பூர் | 23,27.09.2026 | 145 பயனாளிகள்

திருப்பூர் மாவட்ட ஸ்ரீ சத்ய சாயி மந்திரில் 27.09.2026 அன்று தொடர் பஜனை மற்றும் மங்கள ஆரத்தியைத் தொடர்ந்து 110 உணவுப் பொட்டலங்கள் தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டன. மேலும் ஊத்துக்குளி சாந்திநிகேதன் இல்லத்தில் உள்ள 35 நபர்களுக்குப் பிரசாதம் வழங்கப்பட்டது.

அதேபோல் சுவாமியின் அவதார தினமான 23.09.2026 அன்று ராம்நகர் சமிதி சார்பில் சாந்திநிகேதன் முதியோர் இல்லத்தில் உள்ள 35 நபர்களுக்குக் கோதுமை ரொட்டி பிரசாதமாக வழங்கப்பட்டது.





# பெண்களுக்கான இலவச டாலி (Tally) கணினிப் பயிற்சி

திருப்பூர்

06,13,20,27.09.2026

6 பயனாளிகள்

ஸ்ரீ சத்ய சாயி திறன் மேம்பாட்டுத் திட்டம் சார்பாகப் பெண்களுக்கான இலவச டாலி (Tally) கணினிப் பயிற்சி வகுப்பு வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி முதல் 12 மணி வரை நடைபெற்று வருகிறது.

இப்பயிற்சி வகுப்பில் வேலைக்குச் செல்வோர் மற்றும் கல்லூரி மாணவிகள் உள்ளிட்ட 6 பேர் கலந்துகொண்டு தொடர்ந்து பயனடைந்து வருகின்றனர்.



# புரட்டாசி மாத பல்லக்கு சேவை

திருப்பூர்

26.09.2026

30 சேவாதளத்தொண்டர்கள்

சேரன் நகர் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதியின் சார்பில் புரட்டாசி மாத பல்லக்கு சேவை 26.09.2026 அன்று மாலை விஜயாபுரம் பஜனா மண்டலியில் பக்தி சிரத்தையுடன் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் 30 சாய் சகோதர சகோதரிகள் மற்றும் சேவாதளத்தொண்டர்கள் கலந்துகொண்டு சுவாமியின் பல்லக்கு சேவையில் சிறப்பித்தனர்.





# 101 பஜனை வைபவம்

திருப்பூர்

20.09.2026

100 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெரும் கருணையினால் திருப்பூர் மாவட்டம் ராம்நகர் ஸ்ரீ சத்ய சாயி மந்திரில் 20.09.2026 அன்று 101 பஜனை வைபவம் பக்திப் பரவசத்துடன் நடைபெற்றது.

இத்தெய்வீக நிகழ்வில் 100-க்கும் மேற்பட்ட சாய் அன்பர்களும் பக்தர்களும் கலந்துகொண்டு சுவாமிக்குப் பஜனை சமர்ப்பணம் செய்தனர்.





# 108 கோவில்களில் ஸ்ரீ ருத்ர பாராயணம்

திருப்பூர் 20.09.2026

200 சேவாதளத்தொண்டர்கள்

சுவாமியின் 100-வது ஜன்மோத்சவத்தை முன்னிட்டு 108 கோவில்களில் ஸ்ரீ ருத்ர பாராயணம் செய்யும் தொடர் நிகழ்வில், 100-வது ஏகாதச பாராயணம் 20.09.2026 அன்று திருப்பூர் ஈஸ்வரன் கோவிலில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இப்புனித பாராயண நிகழ்வில் 200 சாய் பக்தர்களும் பொதுமக்களும் கலந்துகொண்டு சுவாமியின் அருளாசியைப் பெற்றனர்.





# சுவாமியின் பிரேம ரத பவனி

திருப்பூர்

26.08.2026,17.09.2026

1000 பயனாளிகள்

திருப்பூர் மாவட்டத்தில் 26.08.2026 முதல் 17.09.2026 வரை சுவாமியின் பிரேம ரத பவனி அனைத்துச் சமிதிகள், பள்ளிகள் மற்றும் கிராமங்களில் வெகு சிறப்பாக நடைபெற்றது. பூரண கும்ப மரியாதை, சீர்வரிசைகள், கோலாட்டம் மற்றும் கும்மியாட்டத்துடன் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

பல்வேறு இடங்களில் பாலவிகாஸ் குழந்தைகளின் கலைநிகழ்ச்சிகள், சிறப்புச் சொற்பொழிவுகள், இன்னிசை நிகழ்ச்சிகள், பஜனைகள் மற்றும் நாராயண சேவைகள் நடத்தப்பட்டு சுமார் 1,000 பேர் பயனடைந்தனர். நிறைவில் ரதம் சேலத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.



# 108 திருவிளக்கு பூஜை

திருப்பூர்

14.09.2026

20 சேவாதளத்தொண்டர்கள்

சுவாமியின் 100-வது ஜன்மோத்சவக் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக திருப்பூர் மாவட்டத்தில் நடைபெறும் 108 திருவிளக்கு பூஜைத் தொடரில், 85-வது திருவிளக்கு பூஜை 14.09.2026 அன்று வாவிபாளையம் மகா விநாயகர் கோவிலில் நடைபெற்றது.

இதில் 20 மகளிர் மற்றும் பக்தர்கள் கலந்துகொண்டு பக்தி சிரத்தையுடன் திருவிளக்கு பூஜை செய்து இறையருள் பெற்றனர்.

# ஹோமியோபதி மற்றும் அலோபதி இலவச மருத்துவ முகாம்

திருப்பூர்

03,10,17,24.09.2026

164 பயனாளிகள்

திருப்பூர் மாவட்டத்தில் ஒவ்வொரு வியாழக்கிழமையும் மாலை 5:00 மணி முதல் 6:00 மணி வரை ஹோமியோபதி மற்றும் அலோபதி இலவச மருத்துவ முகாம்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. செப்டம்பர் மாதத்தில் நடைபெற்ற முகாம்களில் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த மொத்தம் 164 நோயாளிகள் கலந்துகொண்டு மருத்துவ ஆலோசனைகளையும் மருந்துகளையும் பெற்றுப் பயனடைந்தனர்.





# இணையவழி பகவத் கீதை சத்சங்கம்

ஈரோடு 13.09.2026

பகவானின் பெரும் கருணையால் 13.09.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று இணையவழியில் பகவத் கீதை சத்சங்கம் நடைபெற்றது.

மாவட்ட ஆன்மீக ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் முனைவர் டி.எஸ். பாலகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் பகவத் கீதை ஐந்தாம் அத்தியாயத்தின் முக்கிய ஸ்லோகங்களுக்கு விரிவான விளக்கவுரை வழங்கப்பட்டது.

# விநாயகர் சதுர்த்தி விழா கொண்டாட்டங்கள்

ஈரோடு | 14.09.2026 | 20 பயனாளிகள் | 40 சேவாதளத்தொண்டர்கள்

ஈரோடு மாவட்டத்தில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு மூலப்பாளையம் சமிதியில் பாலவிகாஸ் குழந்தைகள் களிமண் விநாயகர் உருவங்களைச் செய்து சமர்ப்பித்தனர்; இதில் 18 பேர் பங்கேற்றனர். ஈரோடு மெயின் சமிதி சார்பில் இல்லந்தோறும் சாய் திட்டத்தின் கீழ் 68-வது சிறப்பு பஜனை நடைபெற்றது.

காந்திநகர் சமிதியில் சிறப்பு பஜனை, ஆன்மிகச் சொற்பொழிவு மற்றும் பாலவிகாஸ் குழந்தைகளின் நடன நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றன. குழந்தைகளுக்குப் பரிசுகளும், அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டன; இதில் 22 பேர் பங்கேற்றனர்.



# கோவில் தூய்மைப்படுத்தும் சேவை

ஈரோடு

18.09.2026

9 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெருங்கருணையால் 18.09.2026 அன்று ஈரோடு மூலப்பாளையத்தில் அமைந்துள்ள பாரதி நகர் விநாயகர் கோவிலைத் தூய்மைப்படுத்தும் சேவை நடைபெற்றது.

இச்சேவையில் ஆண்கள் 3 பேர், மகளிர் 6 பேர் என மொத்தம் 9 சேவாதளத்தொண்டர்கள் கலந்துகொண்டு கோவில் வளாகத்தைச் சுத்தப்படுத்தினர்.



# மகிளா தின சிறப்பு பஜனை

ஈரோடு

19.09.2026

17 சேவாதளத்தொண்டர்கள்

சுவாமியின் கருணையால் 19.09.2026 அன்று மகிளா தினத்தை முன்னிட்டு ஈரோடு காந்திநகர் சமிதியில் மகளிர் சிறப்பு பஜனை சிறப்பாக நடைபெற்றது.

தொடர்ந்து திருமதி ஹேமா சாய்ராம் அவர்கள் சாயி அனுபவங்களை எடுத்துரைத்தார். இந்நிகழ்வில் ஆண்கள் 5 பேர், மகளிர் 12 பேர் என மொத்தம் 17 பேர் பக்தி உணர்வுடன் கலந்துகொண்டனர்.





# கரிஷ்யே வசனம் தவ - மாவட்ட சாதனா முகாம்

ஈரோடு | 20.09.2026

பகவானின் பேரருளால் ஈரோடு ஸ்ரீ சத்ய சாயி மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில் 20.09.2026 அன்று "கரிஷ்யே வசனம் தவ" மாவட்ட சாதனா முகாம் கொடியேற்றத்துடன் துவங்கியது.

மாநில மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ஆன்மிகம், கல்வி, சேவை மற்றும் ரத்த தானம் (Liquid Love) குறித்து ஆழமான கருத்துரைகளை வழங்கினர். மூன்று பிரிவுகளின் பொறுப்பாளர்களும் தங்கள் செயல்பாடுகளைச் சமர்ப்பித்து மங்கள ஆரத்தியுடன் நிறைவு செய்தனர்.





# சிறப்பு நாராயண சேவை

ஈரோடு | 26.09.2026 | 147 பயனாளிகள்

பகவானின் பெரும் கருணையினால் 26.09.2026 அன்று அரசூர் புதூர் சமிதியில் 10 நபர்களுக்கு உணவுப் பொட்டலங்களும் குடிநீரும் வழங்கப்பட்டன.

சத்தியமங்கலம் சமிதியில் 147 உணவுப் பொட்டலங்களும், ஈரோடு கிழக்கு சமிதியில் 68 உணவுப் பொட்டலங்களும் சேவாதளத்தொண்டர்களால் எளிய மக்களுக்கு அன்போடு விநியோகிக்கப்பட்டன.

# இலவச பொது மருத்துவ முகாம்

ஈரோடு

27.09.2026

15 பயனாளிகள்

3 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பேரருளால் 27.09.2026 அன்று ஈரோடு கிழக்கு சமிதியில் மருத்துவர் ஏ.எல். ராமநாதன் தலைமையில் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது.

முகாமில் 15 நோயாளிகள் மருத்துவப் பரிசோதனை பெற்றுப் பயனடைந்தனர். 3 சேவாதளத்தொண்டர்கள் கலந்துகொண்டு ஒருங்கிணைப்புப் பணிகளைச் சிறப்பாகச் செய்தனர்.



# பிரேம தரு - மரக்கன்றுகள் நடும் சேவை

ஈரோடு | 27.09.2026 | 300 பயனாளிகள்

சுவாமியின் பேரருளால் 27.09.2026 அன்று ஈரோடு ரங்கம்பாளையம் கலைமகள் கல்வி நிறுவன மைதானத்தில் "பிரேம தரு" திட்டத்தின் கீழ் மரக்கன்றுகள் நடும் சேவை நடைபெற்றது.

இச்சேவையில் சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலியுறுத்தி மொத்தம் 300 மரக்கன்றுகள் சேவாதளத்தொண்டர்களால் நடப்பட்டன.





# 101 பஜனை வைபவம் (101 Bhajans - 101 Voices)

திருச்சி

20.09.2026

110 சேவாதளத்தொண்டர்கள்

சுவாமியின் பரிபூரண அருளால் 20.09.2026 அன்று "101 Bhajans – 101 Voices" நிகழ்ச்சி மிகவும் சிறப்பாகவும் தெய்வீக அனுபவமாகவும் நடைபெற்றது. இதில் மகளிர், ஆடவர் மற்றும் பாலவிகாஸ் குழந்தைகள் என 101 பேர் தங்களது இனிய குரலில் 101 பஜனைப் பாடல்களைப் பாடி பகவானின் திருவடிகளில் சமர்ப்பித்தனர்.

இந்நிகழ்வு சிறப்பாக நடைபெற புதுக்கோட்டை பிரதான சமிதி, பி.ஹெச்.இ.எல் (BHEL) சமிதி, சரஸ்வதி வித்யாலயம், மலையப்ப நகர், கல்லுக்குழி, தில்லை நகர், கே.கே. நகர் மற்றும் ஸ்ரீரங்கம் சமிதிகள் உறுதுணையாக இருந்தன.



# திருக்கோயில் உண்டியல் எண்ணும் சேவை

திருச்சி

23.09.2026

139 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெருங்கருணையினால் 23.09.2026 அன்று ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலில், திருச்சி மாவட்ட அனைத்துச் சமிதிகளையும் சேர்ந்த சேவாதளத்தொண்டர்கள் பங்கேற்ற உண்டியல் எண்ணும் சேவை மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இத்தெய்வீகப் பணியில் 45 ஆண் சேவாதளத்தொண்டர்களும், 94 மகளிர் சேவாதளத்தொண்டர்களும் என மொத்தம் 139 சேவாதளத்தொண்டர்கள் கலந்துகொண்டு தங்களது சேவையினைப் பகவானின் திருவடிகளில் அர்ப்பணித்தனர்.



# இலவச பொது மருத்துவ முகாம்

திருச்சி

14.09.2026

140 பயனாளிகள்

6 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பேரருளால் 14.09.2026 அன்று குழிபிறையில், புதுக்கோட்டை மெயின் சமிதி மற்றும் குழிபிறை நகரத்தார் இணைந்து நடத்திய இலவச மருத்துவ முகாம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. முகாமில் 4 மருத்துவர்கள் கலந்துகொண்டு பொதுமக்களுக்கு விரிவான மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

இதில் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த 72 ஆண்கள், 68 பெண்கள் என மொத்தம் 140 பயனாளிகள் மருத்துவ ஆலோசனைகளையும் மருந்துகளையும் இலவசமாகப் பெற்றனர். 6 சேவாதளத்தொண்டர்கள் பங்கேற்று அனைத்து ஒருங்கிணைப்புப் பணிகளையும் மேற்கொண்டனர்.



# புரட்டாசி திருவிழா குடிநீர் விநியோக சேவை

திருச்சி

19.09.2026

12 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெருங்கருணையுடன், ஸ்ரீரங்கம் ஸ்ரீ அரங்கநாதசுவாமி திருக்கோயிலில் புரட்டாசி முதல் சனிக்கிழமையான 19.09.2026 அன்று, வைரிசெட்டிப்பாளையம் பஜனா மண்டலியின் சார்பில் குடிநீர் விநியோக சேவை மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இத்தெய்வீகப் பணியில் 12 சேவாதளத்தொண்டர்கள் கலந்துகொண்டு பக்தர்களுக்கு அன்போடு குடிநீர் வழங்கித் தங்களது சேவையை சுவாமியின் திருவடிகளில் சமர்ப்பித்தனர்.

# நித்திய நாராயண சேவை

திருச்சி

180 பயனாளிகள்

10 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெருங்கருணையுடன் திருச்சி மாவட்டம் பாலக்குறிச்சி சமிதி மற்றும் ஸ்ரீரங்கம் சமிதி ஆகியவற்றின் சார்பில் செப்டம்பர் மாதத்தில் நித்திய நாராயண சேவை சிறப்பாக நடைபெற்றது.

பாலக்குறிச்சி சமிதியில் நாள்தோறும் 40-க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்குப் பிரசாதம் வழங்கப்பட்டு வருகிறது; இதில் தினசரி 3 ஆண்கள், 3 மகளிர் சேவாதளத்தொண்டர்கள் பங்கேற்கின்றனர். ஸ்ரீரங்கம் சமிதியில் தினமும் கலவை சாதப் பொட்டலங்கள் தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றன; இதில் தினமும் 5 ஆண்கள், 3 மகளிர் சேவாதளத்தொண்டர்கள் அர்ப்பணிப்புடன் சேவை புரிந்து வருகின்றனர்.

# மகிளா தின இரவுச் சிற்றுண்டி நாராயண சேவை

திருச்சி | 19.09.2026 | 45 பயனாளிகள் | 11 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பேரருளால் 19.09.2026 அன்று மகிளா தினத்தை முன்னிட்டு திருச்சி மாவட்டத்தின் பல்வேறு சமிதிகள் சார்பில் இரவுச் சிற்றுண்டி சேவை சிறப்பாக நடைபெற்றது.

கே.கே. நகர் சமிதி சார்பில் அன்னை இல்லத்தில் 200 இட்லிகளும், பார்வையற்றோர் இல்லத்தில் 100 இட்லிகளும் வழங்கப்பட்டன. ஸ்ரீரங்கம், லால்குடி, தில்லை நகர், கல்லுக்குழி சமிதிகள் சார்பில் 1250 இட்லிகள் விழி இழந்தோர் இல்லம் மற்றும் பாரதியார் குருகுலத்திற்கு வழங்கப்பட்டன. புதுக்கோட்டை சமிதி சார்பில் முதியோர் இல்லத்தில் 45 நபர்களுக்குச் சிற்றுண்டி அளிக்கப்பட்டது. இப்பணியில் மொத்தம் 11 சேவாதளத்தொண்டர்கள் ஈடுபட்டனர்.

# வாராந்திர மற்றும் சிறப்பு நாராயண சேவை

திருச்சி

10,20,23.09.2026

162 பயனாளிகள்

4 சேவாதளத்தொண்டர்கள்

திருச்சி கே.கே. நகர் சமிதி மூலமாக வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் 90 முதல் 100 உணவுப் பொட்டலங்கள் தெருவோரங்களில் வசிப்போருக்கு வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் 23-ஆம் தேதியன்று அருவி முதியோர் இல்லத்தில் 30 நபர்களுக்கு இரவுச் சிற்றுண்டியும், சங்கராகருணாலயத்தில் 45 பேருக்குக் காலை உணவும் வழங்கப்பட்டன.

புதுக்கோட்டை பிரதான சமிதி சார்பில் 20.09.2026 அன்று கட்டியாவயல் கிராமத்தில் 72 பயனாளர்களுக்கும், பெரியார் நகர் சமிதி சார்பில் 10.09.2026 அன்று அன்பாலயத்தில் 15 சிறப்புக் குழந்தைகளுக்கும் உணவு வழங்கப்பட்டது. இப்பணிகளில் சேவாதளத்தொண்டர்கள் ஆர்வமுடன் கலந்துகொண்டு சேவையாற்றினர்.





# ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி சிறப்பு பஜனை

திருவண்ணாமலை

04.09.2026

27 சேவாதளத்தொண்டர்கள்

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி சமிதி மற்றும் திருவண்ணாமலை சமிதி சார்பாக ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு சிறப்பு பஜனை நடைபெற்றது. இதில் பக்தர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.





# புதிய பஜனா மண்டலி தொடக்கம், இலவச மருத்துவ முகாம் மற்றும் நாராயண சேவை

திருவண்ணாமலை

06.09.2026

50 பயனாளிகள்

37 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெருங்கருணையினால் வெள்ளக்குளம் கிராமத்தில் புதிய ஸ்ரீ சத்ய சாயி பஜனா மண்டலி தொடங்கப்பட்டது. பிரசாந்தி கொடியேற்றம், வேதம் மற்றும் சிறப்பு பஜனை ஆகியவை நடைபெற்றன.

ஸ்ரீ சத்ய சாயி தன்வந்திரி திட்டத்தின் கீழ் நீரிழிவு, இரத்த அழுத்தம், தைராய்டு மற்றும் பொது மருத்துவம் உள்ளிட்ட இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் 50-க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு, இலவச மருந்துகளும் சனாதன சாரதி இதழும் வழங்கப்பட்டன. தொடர்ந்து நாராயண சேவையும் நடைபெற்றது. திரு. தாசரதே அவர்கள் பஜனா மண்டலி கன்வினராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.





# இலவச கண்புரை அறுவை சிகிச்சை தேர்வு முகாம்

திருவண்ணாமலை

06.09.2026

120 பயனாளிகள்

10 சேவாதளத்தொண்டர்கள்

ஆரணி சமிதி சார்பில் இலவச கண்புரை அறுவை சிகிச்சை தேர்வு முகாம் நடைபெற்றது. இதில் மொத்தம் 120 பேர் பயனடைந்தனர்.

அவர்களில் 25 ஆண்கள், 22 பெண்கள் என மொத்தம் 47 பேர் அறுவை சிகிச்சைக்குத் தேர்வு செய்யப்பட்டனர். அனைவருக்கும் தேநீர், பிஸ்கட், மதிய உணவு மற்றும் குடிநீர் பாட்டில்கள் வழங்கப்பட்டு, அறுவை சிகிச்சைக்காக சென்னை பம்மல் சங்கரா கண் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். சேவாதளத்தொண்டர்கள் மற்றும் மருத்துவக் குழுவினர் ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொண்டனர்.





# விநாயகர் சதுர்த்தி சிறப்பு அபிஷேகம் மற்றும் ஆராதனை

திருவண்ணாமலை 14.09.2026

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி சமிதியில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு பகவானுக்குச் சிறப்பு அபிஷேகம் மற்றும் ஆராதனை மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதில் சமிதி உறுப்பினர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.



# 100 பஜனை சமர்ப்பணம்

திருவண்ணாமலை

20,26.09.2026

39 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பேரருளால் 20.09.2026 அன்று திருவண்ணாமலை சமிதியிலும், 26.09.2026 அன்று வேங்கிக்கால் சமிதியிலும் சுவாமிக்கு 100 பஜன்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பாலவிகாஸ் குழந்தைகள் 8 பேர், மகளிர் 16 பேர் மற்றும் ஆண்கள் 15 பேர் என சமிதி உறுப்பினர்களும் மற்றும் பக்தர்களும் ஆர்வமுடன் பங்கேற்றனர்.





# கரிஷ்யே வசனம் தவ நிகழ்ச்சி

திருவண்ணாமலை | 27.09.2026

65 சேவாதளத்தொண்டர்கள்

திருவண்ணாமலை மாவட்டத்தில் 27.09.2026 அன்று கரிஷ்யே வசனம் தவ நிகழ்ச்சி பிரசாந்தி கொடியேற்றுதல், பாலவிகாஸ் குழந்தைகளின் வேத பாராயணம் மற்றும் சாய் பஜனையுடன் தொடங்கி சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாநில ஒருங்கிணைப்பாளர்கள், மாவட்டத் தலைவர், சமிதி கன்வினர்கள், ஒருங்கிணைப்பாளர்கள் உள்ளிட்ட 42 ஆண்கள், 23 மகளிர் என மொத்தம் 65 பேர் பங்கேற்றனர். நிறைவில் மங்கள ஆரத்தி நடைபெற்று, விபூதி பிரசாதம் மற்றும் சுவாமியின் திருவுருவப் படம் வழங்கப்பட்டன.





# திருக்கோவில் சிறப்பு பஜனை

தஞ்சாவூர் | 02.09.2026 | 100 பயனாளிகள் | 40 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பேரருளால் 02.09.2026 அன்று மாலை பாபநாசம் வட்டம் லட்சுமி நரசிம்ம பெருமாள் கோவிலில் சிறப்பு பஜனை நடைபெற்றது.

இதில் சுமார் 40-க்கும் மேற்பட்ட சாய் அன்பர்களும், 100-க்கும் மேற்பட்ட கிராம மக்களும் பக்திப் பரவசத்துடன் கலந்துகொண்டு பகவானின் திருவருளைப் பெற்றனர்.





# மகிளா தின நாராயண சேவை

தஞ்சாவூர்

19.09.2026

170 பயனாளிகள்

9 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பேரருளால் தஞ்சாவூர் மெஹர்நோன்புச்சாவடி சமிதியில் 19.09.2026 மகிளா தினத்தன்று நாராயண சேவை சிறப்பாக நடைபெற்றது.

9 மகளிர் சேவாதளத்தொண்டர்களால் தூய்மையாகத் தயாரிக்கப்பட்ட 170 உணவுப் பொட்டலங்கள் எளிய மக்களுக்கு அன்போடு விநியோகிக்கப்பட்டன.





# மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான இல்லத்தில் சேவை

தஞ்சாவூர் | 06.09.2026 | 40 பயனாளிகள் | 3 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பேரருளால் 06.09.2026 அன்று மன்னார்குடி சமிதி சார்பில் லட்சுமாங்குடியில் உள்ள மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான இல்லத்திற்குச் சிறப்பு வருகை மேற்கொள்ளப்பட்டது.

அங்குள்ள 40 குழந்தைகளுக்கு அன்போடு சிற்றுண்டி வழங்கப்பட்டது. இதில் 3 சேவாதளத்தொண்டர்கள் கலந்துகொண்டு சேவை புரிந்தனர்.

# பாலவிகாஸ் தேர்வுத்தாள்கள் மதிப்பீட்டுப் பணி

தஞ்சாவூர் | 13.09.2026 | 52 பயனாளிகள் | 52 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பேரருளால் 13.09.2026 அன்று கும்பகோணம் சமிதியில் பாலவிகாஸ் பிரிவு 2 மற்றும் பிரிவு 3 தேர்வுத்தாள்கள் மதிப்பீட்டுப் பணி நடைபெற்றது.
மாநிலக் கல்வி ஒருங்கிணைப்பாளரின் வழிகாட்டுதலில், சமிதியின் பாலவிகாஸ் முன்னாள் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் 52 பேர் இணைந்து மொத்தம் 1,200 தேர்வுத்தாள்களைச் செம்மையாக மதிப்பீடு செய்தனர்.





# கோகுலாஷ்டமி பாலவிகாஸ் கலை நிகழ்ச்சிகள்

தஞ்சாவூர் | 04.09.2026 | 25 பயனாளிகள் | 25 சேவாதளத்தொண்டர்கள்

தஞ்சாவூர் மெஹர்நோன்புச்சாவடி சமிதியில் 04.09.2026 அன்று கிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு பாலவிகாஸ் மாணவர்களின் சிறப்பு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.
மாணவர்கள் கிருஷ்ண லீலை நடனம் ஆடி, கிருஷ்ணாஷ்டகம் பாராயணம் செய்து, பஜனைப் பாடல்களைப் பாடினர். இதில் 17 பாலவிகாஸ் மாணவர்கள், பெற்றோர்கள், குருமார்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.





# திருக்கோவில் சிறப்பு பஜனை

திண்டுக்கல் 06.09.2026

48 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பேரருளால் 06.09.2026 அன்று மாலை சீலப்பாடி அருள்மிகு பெருமாள் லிங்கேஸ்வரர் கோவிலில் சிறப்பு பஜனை நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் ஆண்கள் 10 பேர், மகளிர் 3 பேர் மற்றும் பக்தர்கள் 35 பேர் என மொத்தம் 48 பேர் கலந்துகொண்டு பக்திப் பரவசத்துடன் சுவாமியின் நாம சங்கீர்த்தனம் பாடினர்.



# கோவில் உழவாரப் பணி

திண்டுக்கல்

20.09.2026

22 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பேரருளால் 20.09.2026 அன்று காலை சீலப்பாடி அருள்மிகு பெருமாள் லிங்கேஸ்வரர் திருக்கோயில் வளாகத்தில் உழவாரப் பணி மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இச்சேவை நிகழ்வில் ஆண்கள் 9 பேர், மகளிர் 3 பேர் மற்றும் பக்தர்கள் 10 பேர் என மொத்தம் 22 சேவாதளத்தொண்டர்கள் மற்றும் அன்பர்கள் கலந்துகொண்டு கோவில் பிரகாரங்களைத் தூய்மைப்படுத்தினர்.





# நகர சங்கீர்த்தனம்

திண்டுக்கல் 27.09.2026

17 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பேரருளால் 27.09.2026 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை மகாலக்ஷ்மி நகர் சமிதி பகுதியில் நகர சங்கீர்த்தனம் பக்திபூர்வமாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஆண்கள் 9 பேர், மகளிர் 8 பேர் என மொத்தம் 17 அன்பர்கள் கலந்துகொண்டு பகவானின் திவ்ய நாமங்களை சங்கீர்த்தனம் செய்து வலம் வந்தனர்.



# கிருஷ்ண ஜெயந்தி பாலவிகாஸ் கலை நிகழ்ச்சிகள்

திண்டுக்கல்

04.09.2026

35 பயனாளிகள்

35 சேவாதளத்தொண்டர்கள்

திண்டுக்கல் மாவட்டம் பழனி அண்ணா நகர் பாலவிகாஸ் மையத்தில் 04.09.2026 அன்று குழந்தைகளின் வீணைக் கச்சேரி, கிருஷ்ணர் வேட நிகழ்வு மற்றும் பஜனை நடைபெற்றன; இதில் 20 பேர் பங்கேற்றனர்.

போக்குவரத்து நகர் மையத்தில் குழந்தைகள் கிருஷ்ணர், ராதை வேடமிட்டு ஆடிய நடன நிகழ்ச்சி நடைபெற்றது; குழந்தைகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. இதில் 15 பேர் பங்கேற்றனர்.

# நாராயண சேவை

காஞ்சிபுரம் வடக்கு

13.09.2026

111 பயனாளிகள்

7 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பேரருளால் 13.09.2026 அன்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் மாடம்பாக்கம் சமிதியில் நாராயண சேவை நடைபெற்றது. 26 சாய் குடும்பங்களின் இல்லங்களிலிருந்து உணவுப் பொட்டலங்கள் பெறப்பட்டன.

பிரம்மார்ப்பணம் செய்யப்பட்ட 111 உணவுப் பொட்டலங்கள், 7 சேவாதளத்தொண்டர்கள் மூலமாக மாடம்பாக்கம் சுற்றியுள்ள எளிய மக்களுக்கு அன்போடு விநியோகிக்கப்பட்டன.





# இலவச கண் மற்றும் பொது மருத்துவ முகாம்

**காஞ்சிபுரம் வடக்கு** | **27.09.2026**

**167** பயனாளிகள் | **40** சேவாதளத்தொண்டர்கள்

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் மாடம்பாக்கம் சமிதியில் இந்து மிஷன் மருத்துவக் குழுவுடன் இணைந்து 27.09.2026 அன்று இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது. மொத்தம் 167 பேர் பயனடைந்தனர். 20 பேருக்குக் கண்ணாடிகள் பரிந்துரைக்கப்பட்டு, 37 பேர் இலவச கண்புரை அறுவை சிகிச்சைக்குத் தேர்வு செய்யப்பட்டனர்.

10 பேர் கொண்ட மருத்துவக் குழுவுடன் 40 சேவாதளத்தொண்டர்கள் மற்றும் பாலவிகாஸ் குழந்தைகள் இணைந்து சேவை புரிந்தனர். மேலும் பயனாளிகள் மற்றும் பொதுமக்களுக்கு காலை மற்றும் மதிய நாராயண சேவையும் வழங்கப்பட்டது.



# 11-ஆம் ஆண்டு தொடக்க விழா ஸ்ரீ ருத்ர பாராயணம்

காஞ்சிபுரம் வடக்கு

26.09.2026

71 சேவாதளத்தொண்டர்கள்

மூவரசம்பேட்டை சமிதியின் 11-ஆம் ஆண்டு தொடக்க விழாவை முன்னிட்டு 26.09.2026 அன்று ஸ்ரீ ருத்ர பாராயணம் பக்தி சிரத்தையுடன் நடைபெற்றது.

தொடர்ந்து மங்கள ஆரத்தி மற்றும் நாராயண சேவை நடைபெற்றன. இதில் சமிதி உறுப்பினர்கள், பாலவிகாஸ் குழந்தைகள், பொதுமக்கள் என 71 பேர் கலந்துகொண்டு பகவானின் ஆசிகளைப் பெற்றனர்.






# சத்ய சாயி திவ்ய நாமாஞ்சலி (101 பஜனை)

தூத்துக்குடி 20.09.2026

30 பயனாளிகள் 55 சேவாதளத்தொண்டர்கள்

உலக நன்மைக்காகவும் மழை வேண்டியும் தூத்துக்குடி காயத்ரி மண்டபத்தில் 20.09.2026 அன்று 101 பஜனை திவ்ய நாமாஞ்சலி வைபவம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.
இதில் பாலவிகாஸ் மாணவர்கள் 15 பேர், முன்னாள் மாணவர்கள் 6 பேர், சமிதி அன்பர்கள் 30 பேர் மற்றும் பொதுமக்கள் 35 பேர் என 55-க்கும் மேற்பட்டோர் பஜனைகள் பாடி பகவானின் திருவடிகளில் சமர்ப்பித்தனர்.





# மாவட்ட அளவிலான பாலவிகாஸ் திறன் தேடல் திருவிழா

தூத்துக்குடி

27.09.2026

69 பயனாளிகள்

135 சேவாதளத்தொண்டர்கள்

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அம்பாள் வித்யாலயாவில் 27.09.2026 அன்று மாவட்ட அளவிலான பாலவிகாஸ் திறன் தேடல் திருவிழா இனிதே நடைபெற்றது.

இதில் 69 பாலவிகாஸ் குழந்தைகள் உள்ளிட்ட மொத்தம் 135 பேர் பங்கேற்றனர். போட்டிகளில் பங்கேற்ற அனைத்துக் குழந்தைகளுக்கும் சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கி ஊக்கப்படுத்தப்பட்டது.





# பாலவிகாஸ் மாணவர்களுக்கான திறன் தேடல் போட்டிகள்

விருதுநகர் | 04.10.2026 | 40 பயனாளிகள் | 25 சேவாதளத்தொண்டர்கள்

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் சமிதியில் 04.10.2026 அன்று பாலவிகாஸ் குழந்தைகளுக்கான ஸ்லோகம் மற்றும் பஜனை உள்ளிட்ட திறன் தேடல் போட்டிகள் உற்சாகமாக நடைபெற்றன.

இதில் 32 பாலவிகாஸ் குழந்தைகள், 20 பெற்றோர்கள், 8 பாலவிகாஸ் குருமார்கள் மற்றும் 6 சேவாதளத்தொண்டர்கள் என அனைவரும் மிகுந்த ஆர்வத்துடன் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.





# சேவா வாணி

எதிர் வரும் மாதங்களில் தங்கள் மாவட்ட முக்கிய நிகழ்வுகள் இந்த மின் துணை இதழில் இடம் பெற, தெளிவான புகைப்படங்களுடன், தமிழில் நிகழ்ச்சி பற்றிய சிறு குறிப்புடன், மாவட்டத் தலைவர் வழியாக

**ssssotnreporting@gmail.com**

முகவரிக்கு அஞ்சல் அனுப்பவும்.

### முக்கிய இணைப்புகள்

*Love All, Serve All · Help Ever, Hurt Never*

**ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனங்கள் (இந்தியா)**

தமிழ்நாடு - தெற்கு